*ஆய்வுக்கட்டுரை இல: 48*

# முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் நாடுகளில் பிக்ஹ் ரீதியான கருத்து முரண்பாடுகளை கையாளும் முறைகள்- இலங்கையை மையப்படுத்திய ஒரு ஆய்வு

**M.T.Habeebullah[1],S.M.M.Mazahir[2] and M.H.M.Nairoos[3]**

[1]*Department of Arabic Language, South Eastern University of Sri Lanka*
[2&3] *Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka*

***ஆய்வுச்சுருக்கம்***

இஸ்லாமிய சட்டத்துறை மனித வாழ்வை நெறிப்படுத்தி ஒரு கட்டுக்கோப்பான வாழ்கையை சீரமைத்து ஈருலக ஈடேற்றத்திற்காகவும் அல்லாஹ்வால் வழங்கப்பட்ட முழுமையான வாழ்கை நெறியாகும். வஹியின் வழிகாட்டலுடன் அமையப் பெற்றுள்ள இஸ்லாமிய சட்டங்கள் தெளிவாக விளக்கப்பட்டிருந்த போதிலும் அடிப்படையான விடயங்கள் தவிர்ந்த ஷரீஆவின் கிளைச் சட்டங்களில் வரையறைகளுடன் கூடிய வகையில் மனிதன் பகுத்தறிவை பிரயோகிப்பதற்கும் ஒன்றுக்கொண்டு வேறுபட்ட அபிப்பிராயங்களை முன்வைப்பதற்கும் ஷரீஆ அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. இத்தகைய பிரயோக நடைமுறை இஸ்லாமிய வரலாற்றுக் காலங்கள் நெடுகிலும் இருந்து வந்துள்ளதுடன் இதனடியாகவே வரலாற்றில் சடடத்துறை சார்ந்த பல சிந்தனைப் பிரிவுகளும் (மத்ஹப்புகள்) தோற்றம் பெற்றன என்பதை அறிய முடியும். இத்தகைய அங்கீகரிக்கப்பட்ட கருத்து முரண்பாடுகளைக் கையாள்வதில் இஸ்லாமிய அறிஞர்கள் ஷரீவின் அடிப்படைகளைப் பேணி நலினத்தோடும் விரிந்த மனப்பாங்கோடும் நடுநிலைப் போக்குகளைக் கடைப்பிடித்தும் தீவரப்போக்கு மற்றும் இகழத்தக்க பிரிவினைகள் என்பவற்றை தவிர்த்தும் வந்துள்ளனர். சிறுபான்மையாக முஸ்லிம்கள் வாழும் இலங்கை போன்ற நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட கருத்து முரண்பாடுகளை புரிந்து கொள்வதிலும் அதனைக் கையாள்வதிலும் இறுக்கமான மற்றும் கடினமான போக்குகளை முஸ்லிம்களில் பெரும்பாலானோர் கடைப்பிடிக்கின்றனர். இது தொடர்பான தெளிவின்மையும் அதனை கையாளும் முறைகளில் சரியான வழிமுறைகள் பின்பற்றப்படாமையையும் அவர்களிடையே அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதனால் முரண்பட்டுக் கொள்ளும் அவர்கள் மற்றவர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் விதத்தில் நடந்து கொள்வதும் ஷரீஆவின் சட்டங்களைப் பின்பற்றுவதில் அலட்சியம் காணப்படுவதும் அண்மைக் காலமாக அவதானிக்கப்பட்டு வரும் விடயமாகும். எனவே இந்த ஆய்வு ஷரீஆவில் அங்கீகரிக்கப்பட்ட கருத்து முரண்பாடுகள் பற்றிய தெளிவையும் இலங்கையில் சிறுபான்மை முஸ்லிம்கள் அதனை எவ்வாறு கையாள வேண்டும் என்ற புரிதலையும் அதிலுள்ள நடைமுறை ரீதியான சவால்களையும் தடைகளையும் விளக்குவதை நோக்காகக் கொண்டுள்ளது. இந்த ஆய்வில் முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகளை ஆய்வாளர்கள் அடிப்படையாகக் கொண்டு விமர்சன ரீதியாக பகுப்பாய்வுக்குட்படுத்தி பண்பு மற்றும் அளவு சார் வழிமுறைகளினூடாக பகுப்பாய்வு செய்துள்ளனர். முதலாம் நிலைத்தரவுகளில் நேரடி நேர்காணல், ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்கலந்துரையாடல் என்பன பயன்படுத்தப்படுவதுடன் நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தளங்கள் என்பனவும் இரண்டாம் நிலைத் தரவுகளில் கையாளப்பட்டுள்ளது. பெறப்பட்ட தகவல்கள் SPSS முறையின் மூலம் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. சிறுபான்மையாக வாழும் இலங்கை முஸ்லிம்கள் அங்கீகரிக்கப்பட்ட கருத்து முரண்பாடுகள் தொடர்பான

தெளிவினை பெற்றுக் கொள்வதற்கும் அதனை நடைமுறை சார்ந்த சவால்களை இனங்காணவும் அதன் அணுகு முறைகளை புரிந்து அவற்றைப் பேணி நடப்பதற்கும் இவ்வாய்வு துணை செய்யும் என்பது அதன் எதிர்பார்க்கப்படும் விளைவுகளாகும்.

**திறவுச் சொற்கள்**: *கருத்து முரண்பாடு, அங்கீகாரம், இஜ்திஹாத், முஸ்லிம் சிறுபான்மை, நெகிழ்வு*

## ஆய்வு அறிமுகம் ( Introduction )

மனிதர்களை நெறிப்படுத்துவதற்காக அல்லாஹ்வினால் அருளப்பட்ட இஸ்லாமிய மார்க்கம் மனிதனின் நலனை அடிப்படையாகக் கொண்டு பல சட்டங்களை இயற்றியுள்ளது. அவை மனித சமூகத்தை கொச்சைப்படுத்துவதோ கஷ்டப்படுத்துவதையோ நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. புனித அல் குர்ஆன் இதனைக் குறிப்பிடுகையில் " எந்தவொரு ஆத்மாவையும் அதன் சக்திக்கு மேலால் அல்லாஹ் கஷ்டப்படுத்துவதில்லை"[1]

இஸ்லாமிய சட்டங்களைப் பொருத்தவரையில் அது மனித நலன்களை (அல் மஸாலிஹ்) பாதுகாப்பதையும் அவர்களுக்கான உரிமைகளையும் கடமைகளையும் வரையறுப்பதையும் நோக்காகக் கொண்டவையாகும். இத்தகைய இறை சட்டங்கள் மனித அறிவையும் அவர்களின் அபிப்பிராயங்களையும் மதிப்பதுடன் அது கால இட சூழல் என்பவற்றைக் கருத்திற் கொண்டும் காணப்படுவதுடன் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் நெகிழ்ச்சிப் (முரூனா) போக்கையும் கடைப்பிடித்துள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

மனித சிந்தனைகளுக்கு இடமளித்து அதன் கருத்துச் சுதந்திரத்தை மதிக்கும் இஸ்லாம் அத்தகைய சந்தர்ப்பங்களில் ஷரீஆவின் கிளையம்சங்களில் கருத்து பேதங்கள் நிகழ்வதையும் அங்கீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இஸ்லாமிய வரலாற்றில் நபியின் காலம் முதல் நவீன காலம் வரை இத்தகைய கருத்து பேதங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். எனினும் இத்தகைய கிளையம்சங்ளில் தோன்றும் பிரச்சினைகளின் போது எத்தகைய வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்பதை எமது முன்னோர்கள் வழிகாட்டல்களை வழங்கியிருந்த போதும் சிறுபான்மையாக முஸ்லிம்கள் வாழும் நாடுகளில் கருத்து முரண்பாடுகளை அணுகுவதில் சில இறுக்கமான போக்குளும் அதே வேளை இவை பற்றிய பூரண தெளிவின்மையும் காணப்படுகிறது.

---

[1] . ஸூறா அல் பகரா வசனம் :

இந்த ஆய்வானது சிறுபான்மை முஸ்லிம் நாடுகளில் குறிப்பாக இலங்கை போன்ற நாட்டில் ஷரீஆ ரீதியாக தோன்றும் கிளைப் பிரச்சினைளை எப்படிக் கையாள வேண்டும் என்பதை ஏலலே செய்யப்பட்ட முதல் நிலை தரவுகளையும் இரண்டாம் மூலங்களையும் அடிப்படையாகக் கொண்டு ஆய்வுக் குட்படுத்தப்படுகிறது.

இந்த ஆய்வின் மூலம் கருத்து முரண்பாடுகளை அணுகுவதற்கான வழிமுறைகளையும் குறிப்பாக சிறுபான்மை முஸ்லிம் நாடான இலங்கையில் முஸ்லிம் சமூகத்திற்கு அவை தொடர்பான தெளிவையும் முன்வைப்பதாக அமைகிறது.

3. **ஆய்வின் நோக்கங்கள்: (**Purpose of the study)

1. ஷரீஆவில் அங்கீகரிக்கப்பட்ட சட்ட ரீதியான கருத்து முரண்பாடுகள் பற்றிய தெளிவை வழங்கல்.
2. இலங்கை சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தில் ஷரீஆவில் அங்கீகரிக்கப்பட்ட சட்ட ரீதியான கருத்து முரண்பாடுகள் தொடரபில் பின்பற்றப்படும் அணுகுமுறைகள் பற்றி விளங்கிக் கொள்ளுதல்
3. இலங்கையில் ஷரீஆவில் அங்கீகரிக்கப்பட்ட சட்ட ரீதியான கருத்து முரண்பாடுகளை் கையாளும் முறை பற்றிய ஒழுங்கினை முன்வைத்தலும் நடைமுறையிலுள்ள சவால்களைப் புரிந்து கொள்ளலும்.

**4. ஆய்வு முறையியல்:** (Methodology)

இவ்வாய்வுக்கு முதல் நிலைத்தரவுகள், வழிநிலைத்தரவுகள் ஆகியன ஆய்வு மூலங்களாக கொள்ளப்படுகின்றன.

01. முதல் நிலைத்தரவுகள் ( Primary Data ):
    - (அ) வடிவமைக்கப்பட்ட பேட்டி காணும் முறை
    - (இ) மேற்பார்வை (Observation)
02. இரண்டாம் நிலைத் தரவுகள் ( Secondary Data):
    - (அ) நூல்கள்
    - (ஆ) சஞ்சிகைகள்
    - (இ) பத்திரிகைகள்

மேற்படி திரட்டப்பட்ட தகவல்கள் பண்புசார் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டதுடன் விமர்சன ரீதியிலமைந்த ஒன்றாகவும் அமைந்துள்ளன.

## 5. கடந்த கால இலக்கிய மீளாய்வு (Literary Review)

பொதுவாக பிக்ஹ் அல் இக்திலாப் (கருத்து முரண்பாடுகள் பிக்ஹ்) தொடர்பாக சில நூல்கள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் என்பன அறபு மொழியில் ஆரம்ப கால மற்றும் நவீன காலப்பகுதிகளில் அறிஞர்களால் எழுதப்பட்ட போதிலும் சிறுபான்மையோடு தொடர்புபடுத்தும் வகையிலும் கருத்து முரண்பாடுகளின் அணுகு முறை தொடர்பாக பொதுவாகவும் ஆய்வுகள் தமிழ் மொழியில் பெரியளவு வெளிவரவில்லை என்று தான் கூறவேண்டும். இந்த வகையில் நூல்களில் அமெரிக்காவிலுள்ள இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தின் வெளியீடாக வெளிவந்த கலாநிதி தாஹா ஜாபிர் அல்அலவானி அவர்களின(1992) '' அதப் அல் இக்திலாப்'' என்ற அறபு நூலும் , இஸ்லாமிய சிந்தனையாளர் கலாநிதி யூஸுப் அல் கர்ளாவி அவர்களின்(1985) ''ஷரீஆவில் அங்கீகரிக்கப்பட்ட கருத்துமரண்பாடுகளுக்கும் இகழப்பட்ட பிரிவினைக்கும் மத்தியில் இஸ்லாமிய எழுச்சி '' என்ற அறபு நூலும் இத்துறையில் எழுதப்பட்ட முக்கிய நூல்களாகும். இவ்வாறே செய்க் முஹம்மது அல் கஸ்ஸாலி அவர்களின் ''அல்ஹக் அல் முர்ரு'' மற்றும் '' கதாயிபுல் ஹக்'' ஆகிய நூல்களும் இமாம் ஹஸன் அல் பன்னா அவர்களின் சிந்தனைகள் தொடர்பான ''அல் உஸூலுல் இஷ்ரூன்'' என்ற நூலும் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். அல் உம்மா(1997), அல்முஜ்தம.். (1998) இஸ்லாமிய நிந்தனை'' (2012) ஆகிய அரபு சஞ்சிகைகள் மற்றும் மீள்பார்வை, அலஹஸனாத் போன்ற தமிழ் பத்திரிகையிலும் (2012) பிக்ஹ் அல் இக்திலாப் தொடர்பாக சிறியளவிலான விளக்கங்கள் வெளிவந்துள்ளன. எனினும் தமிழ் மொழிகளில் இத்தலைப்பு தொடர்பான ஆக்கங்கள் வெளிவந்திருப்பது மிக அரிதாகவே உள்ளன.

## 6. ஆய்வின் மையம் : (ஆய்வு பற்றிய கலந்துரையாடலும் கண்டுபிடிப்புக்களும்: Discussion & Findings)

### அ) பிக்ஹ் ரீதியான கருத்து முரண்பாடுகள்

இஸ்லாமிய சட்டத்துறையைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்படும் ''பிக்ஹ்'' என்ற பதம் தெளிவுபடுத்தல் , விளக்கிவைத்தல் வார்த்தைகளிலுள்ள சிக்கல்களை நீக்குதல் போன்ற கருத்துக்கள் வழங்கப்படுகின்றது. இஸ்லாமிய பரிபாஷையில் '' பருவ வயதை அடைந்த புத்தி சுவாதினமுள்ள ஒரு முஸ்லிமின் வாழ்வில் ஏற்படும் அனைத்து விவகாரங்களுக்கும் அடிப்படை

மூலாதாரங்களான குர்ஆன் சுன்னா வழியில் நின்று ஏனைய துணைமூலாதாரங்களின் வழியில் நின்று தெளிவுபடுத்தும் கலையே பிக்ஹ் ஆகும்.''[2]

இஸ்லாமிய சட்டக்கலையைப் பொறுத்த வரையில் அது மனித வாழ்வின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு அல்லாஹ்வால் இயற்றப்பட்ட சட்டங்களாக இருப்பினும் மனித இஜ்திஹாதுக்கும் இடமளிப்பதிலிருந்து அது விலகிக் கொள்ளவில்லை. இதனாலேயே இஸ்லாமிய சட்டங்களின் கிளைப்பகுதிகளில் குறிப்பாக இஜ்திஹாத் செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட அம்சங்களில் வேறுபட்ட அபிப்பிராயங்களை கொள்வதற்கு சாத்தியப்பாடுகள் அதிகமாகவே உள்ளன. இது மனிதர்களுக்கு அல்லாஹ் வழங்கியிருக்கின்ற அருளாகும். இந்த வகையிலேயே நாம் இஸ்லாத்தின் அம்சங்களில் உள்ள கருத்து முரண்பாடான அம்சங்களை நோக்க வேண்டும்.

இதனாலேயே இஸ்லாமிய வரலாற்றில் பல கருத்து முரண்பாடுகள் இஸ்லாமிய சட்ட அறிஞர்களிடையே தோன்றியிருப்பதைக் காணலாம். இவை அனைத்தும் முஜ்தஹித் அறிஞர்களின் ஏகோபித்த கருத்தின் படி அங்கீகாரத்திற்கு உட்பட்டவைளாகும். அது தொடர்பாக பல நவீன பழைய இஸ்லாமிய அறிஞர்கள் பலர் நூல்களையும் எழுதியுள்ளனர். கருத்து முரண்பாடுகளைப் பொறுத்தவரை அது கால இட சூழல் சந்தர்ப்பம் என்பவற்றை கருத்திற் கொண்டு இயல்பாகவே இடம்பெறக்கூடிய ஒன்றாகும். இதனை ஒரு சாபக்கேடாகவோ இஸ்லாத்திங்கு அப்பாட்பட்ட ஒன்றாகவோ பார்க்கக் கூடாது. ஒரு விடயத்தில் இரு வேறுபட்ட கருத்துக்கள் இருப்பது நியாயமானதாகும்.

சில இஸ்லாமிய அறிஞர்கள் அதனை அருளாகவும் விசால சிந்தனையின் பேறாகவும் அதனை நோக்கியிருக்கிறார்கள். இமாம் சுயூத்தி (றஹ்) அவர்கள் குறிப்பிடும் போது'' எனது சமூகத்தின் கருத்து முரண்பாடு அருளாகும்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்.[3]

இங்கு அருள் எனக் குறிப்பிடப்பட்டிருப்புது சமூகத்தின் மீது இஸ்லாமிய சட்டங்கள் இலகு படுத்தப்பட்டிருப்பதன் மூலம் அத எப்போதும் அருளாகவே இருக்கும் என்பதாகும்[4].
உமைய்யா ஆட்சியாளர்களில் சிறந்த ஆட்சியாளரும் ஐந்தாம் குலபாஉர் ராஷிதீன்களின் ஒருவராகவும் முன்னணி சீர்திருத்த வாதிகளில் முக்கியமானவராகவும் கணிக்கப்படுகின்ற உமர் பின் அப்துல் அஸீஸ (ரஹ்) அவர்கள் இந்த பிக்ஹ் ரீதியான கருத்து முரண்பாடுகளை

---

[2] .கல்லாப் அப்துல் வஹ்ஹாப் 1972, உஸூலுல் பிக்ஹ் , தாருல் கலம் பக் 10

[3] .இமாம் சுயூத்தி அல் ஜாமிஊஸ் ஸகீர். இமாம் அல் மனாவி " பைலுல் கதீர்''2/212

[4] .யூஸுப் பல் கர்ழாவி 1995 அஸ்ஸஹ்வா அல் இஸ்லாமிய்யா கய்னல் அல் இக்திலாப் அல் மஷ்ரூயி எதபர்ர்க்கில் மத்மூமி இபக்- 48

அருளாகவே கருதியிருக்கிறார். அவர் ஸஹாபாகடகளிடையே நிலவிய கருத்து முரண்பாடுகள் தொடர்பாக கூறும் போது'' அவர்களின் கருத்து முரண்பாடுகளில் விரிந்த தன்மையும் அருளும் இருக்கின்றது. மேலும் ஸஹாபாக்கள் கருத்து முரண்பாடுகள் கொள்ளவில்லை என்ற விடயம் எனக்கு சந்தோஷத்தை அளிக்கவில்லை. ஏனெனில் அவர்கள் கருத்து முரண்பாடு பட்டிருக்காவிட்டால் எங்களுக்க எந்த சலுகையும் வழங்கப்பட்டிருக்காது.'' [5]

இவ்வாறே நான்கு மத்ஹப் சிந்தனைப் போக்குக் கொண்ட இமாம்களுக்கு பின்னால் வந்த பல அறிஞர்களும் கருத்த முரண்பாடுகளுடன் தொடர்பாக அடிப்படையான விடயங்களைப் பேசியுள்ளதுடன் சில நூல்களையும் எழுதியுள்ளனர். இவற்றில் ஹிஜ்ரி எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஷெய்க் அபூ அப்துல்லாஹ் அப்துர் ரஹ்மான் என்பவரின்'' றஹ்மத்துல் உம்மா பீ இக்திலாபில் அயிம்மா'' என்ற நூல் முக்கியமானது. மேலும் ஷெய்க மர்இ அல் ஹன்பலி அவர்கள் தனது'' தன்வீர் அல் பஸாயிர் அல் முகல்லிதீன்'' என்ற நூலில்'' மதஹப் இமாம்களிடையே நிலவிய பிக்ஹ் ரீதியான கருத்த முரண்பாடானது இந்த மார்க்கத்தில் மிகப் பெரிய அருளும் சிறப்பும் ஆகும். அதில் அறிஞர்களுக்கு புரியும் வகையிலான நுட்பமான இரகசியம் உள்ளன. எனினும் அறிவீனர்கள் அதனை சரியாகப் புரிந்து கொள்ள மாட்டார்கள். அவ்விரு சாராரினதும் கருத்து பேதங்கள் இந்த சமூகத்திற்கே உரித்தான தனிப்பண்பும் இந்த மார்க்கத்தின் தயாளத் தன்மை மற்றும் இலகு போக்குக்கு விரிந்த பார்வையைக் கொடுப்பதாகவும் உள்ளது.''[6]

இந்த வகையில் கருத்து முரண்பாடுகள் ஷரீஆவில் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது என்பதுடன் வரலாற்று நெடுகிலும் அறிஞர்களிடையே இது இடம'பெற்று வந்துள்ளதைக் காணலாம். மேலும் கருத்து முரண்பாடுகளைப் பொறுத்த வரை அது தோன்றுவதற்கான காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இரண்டு வகையாக அதனை பாகுபடுதலாம்.

1. பண்பாட்டியலோடு சார்ந்த காரணங்கள்
2. சிந்தனையுடன் சார்ந்த காரணங்கள்

பண்பாட்டியலுடன் சார்ந்த காரணங்கள் எனும் போது ஏமாற்றம் பிறரைப் பற்றிய பிழையான எண்ணம், சுயமான பிரபல்ய நோக்கம், மனோ இச்சை, பிடிவாதம் தீவிரம் போன்ற காரணங்கள் என்பன உருவாவதற்கான காரணங்களாகவுள்ளன. மேலும் கருத்துரீதியான காரணங்கள் எனும் போது பல கருத்துகளுக்கு இடமளிக்கக்கூடிய விடயங்களில் அறிஞர்களிடையே நிலவும் வேறுபட்ட அபிப்பிராயமாகும்.

---

[5] .பைலுல் கதீர் 1.:.209, இப்னு அப்துல் பர் ஜாமிஉ பயான் அல் இல்ம் பாகம் 2 பக் - 80

[6] .இமாம் அல் பன்னானி உம்ததுத் தஹ்கீக் பக் 37

சிந்தனா ரீதியாக கருத்து முரண்பாடுகள் உருவாகுவதற்கு பல பின்புலக் காரணங்கள் அடிப்படையாக அமைகின்றன. அவற்றை பன்வருமாறு குறிப்பிடலாம்.

1. **மார்க்கத்தின் இயல்பு**: மனிதர்கள் பின்பற்றி வாழ்வதற்காக அல்லாஹ் எமக்களித்த மார்க்கம் அவர்களின் பலம் பலவீனம் என்பவற்றை கருத்திற் கொண்ட சட்டங்களை வகுத்துள்ளமை அதன் சிறப்பம்சங்களில் உள்ளவையாகும்.‘‘ நான் இலகுவான மார்க்கத்தைக் கொண்டே அனுப்பப்பட்டுள்ளேன்.‘‘[7]
2. **மொழியின் தன்மை** : அல்குர்ஆன் ஹதீஸ் என்பவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ள பதங்கள் பொதுவாகவும் (العام) குறிப்பானதாகவும் (الخاص) வரையறுக்கப்படாத வையாகவும் (المطلق) வரையறுக்கப்பட்டதாகவும் (المقيد) யதார்த்தமாகவும் ( الحقيقي) சிலேடையாகவும் ( المجازي) அல்லது சந்தர்ப்ப சூழ்நிலையில் கூறப்பட்டதாகவும் இருக்கலாம். இவற்றை சரியாக புரிந்து கொள்ளாது போகும் போது கருத்து முரண்பாடுகள் தோன்றலாம்.
3. **மனித இயல்பு:** மனிதர்கள் அனைவரம் சமமான படை கோள அமைப்பையோ பண்புகளையோ கொண்டு படைக்கப்படாது வித்தியாசமான அமைப்பிலேயே அல்லாஹ் படைத்திருக்கின்றான்.‘‘வானங்கள் பூமி படைக்கப்பட்டிருப்பதும் உங்களின் மொழிகள் நிறங்கள் என்பன வேறுபட்டிருப்பதும் அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் உள்ளவையாகும்‘‘[8]
4. **பிரபஞ்ச மற்றும் வாழ்கை இயல்பு**: பிரபஞ்ச நிலைகள் கால இட சுவாத்திய நிலைகளுக்கு ஏற்ப மாறுபடுவதும் வாழ்கை நிலையும் இந்நிலைகளுக்கு ஏற்ப வேறுபட்டிருப்பதும் அவதானிக்கத் தக்க விடயமாகும்.

## (ஆ) இலங்கை சிறுபான்மை முஸ்லிம்களும் அங்கீகரிக்கப்பட்ட கருத்து முரண்பாடுகள் தொடர்பான அணுகுமுறைகளும் :

இலங்கை முஸ்லிம்கள் தேசிய பிரதான இனங்களில் 10% மாக பல பாகங்களில் செரிந்தும் பரந்தும் வாழ்கின்ற ஒரு இனமாகும். இலங்கையில் கல்வி நிருவாக ரீதியான செல்வாக்குடன் வாழும் முஸ்லிம்கள் சமய கலாசார விடயங்களைப் பின்பற்றுவதிலும் முன்னணியில் காணப்படுகின்றனர். ஆரம்பத்தில் வியாபாரத்தில் அதிகம் அக்கரை செலுத்திய முஸ்லிம்கள் கடந்த சில தசாப்த காலமாக கல்வியில் அதிக ஆர்வம் காட்டி வருவகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவர்களின் உலகாய கல்வியோடு தம்மை சுரக்கிக் கொள்ளாது மார்க்கக் கல்வியினையும் திறம்பட கற்று தேர்ந்த வருவது அவதானிக்க் கூடியதாவுள்ளது. வெளிநாட்டு அறபு மற்றும் இஸ்லாமிய நாடுகளுடனும் சமய மற்றும் தொழில் வாய்ப்பு கல்வி ரீதியாக தொடர்பாடல்களையும் விருத்தி செய்த வண்ணமுள்ளனர்.

[7] .முஹம்மது பின் இஸ்மாஈல் இமாம் புகாரி ஸஹீஹ் அல் புகாரி
[8] அல்குர்ஆன் ஸூரா அர்ரூம் வசனம்: 22

இவற்றின் தாக்கங்களாக அண்மைக் காலமாக இலங்கை முஸ்லிம்களிடையே சமய ரீதியான அபார விருத்தியும் விழிப்புணர்வும் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கத் தக்கதாகும். சில போது சமயத்தைப் பின்பற்றுவதில் தீவிர ஈடுபாடும் பழமையை புறக்கணிக்கும் பாங்கும் மத்திய கிழக்கு நாடுகளில் பின்பற்றப்படும் மார்க்க செயற்பாடுகள் இங்கு செல்வாக்குப் பெறுதலும் அவற்றை மக்களில் சிலர் அந்நியமாக நோக்குவதும் அவதானிக்கப்படும் விடயங்களாகும். இதனால் சட்ட ரீதியான வேறுபட்ட கருத்து முரண்பாடுகள் தெரிவிக்கப்படும் போது பிரச்சினைகள் தோன்றி வருவது அவதானிக்கத்தக்கதாகவுள்ளது.

இத்தகைய கருத்து முரண்பாடான விடயங்களில் ஈடுபடுவோர்களில் அநேகமானவர்கள் ஷரீஆ தொடர்பான அறிவு குறைந்தவர்களாகவே உள்ளனர என்பதை அவதானிக்கலாம். குறிப்பாக த.்.வா அமைப்புகளில் ஈடுபடும் தலைமைகள் கூட அங்கீகரிக்கப்பட்ட கருத்து முரண்பாடுகள் தொடர்பில் தெளிவற்றவர்களாகவே உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவர்களில் அநேகமானவர்களிடம் இஸ்லாமிய ஷரீஆவின் துணைமூலாதாரங்கள் தொடர்பிலும் தெளிவின்மையும் காணப்படுவது ஆய்வாளர்களின் இஸ்லாமிய த.்.வா அமைப்புப் பிரதிநிதிகளை நேர்காணல்கள் செய்ததன் மூலம் அவதானிக்கப்பட்டுள்ளது.

சிறுபான்மையாக இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் பெரும்பான்மை சமூகத்தின் அபிலாசைகளை மதிப்பதுடன் இஸ்லாமிய சட்டங்களில் பல கருத்துகளுக்கு இடம்பாடான சட்ட அம்சங்களில் பெரும்பான்மையையும் அனுசரித்துச் செல்லும் அல்லத அதற்கு நெருக்கமாகவுள்ள விடயங்களை பின்பற்றியொழுகுவதே சாலச் சிறந்ததாகவுள்ளது.

இன்று இஸ்லாமிய உலகில் செல்வாக்குப் பெற்று விளங்கும் சமய நிறுவனங்களான இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம், மஜ்மஉல் பிக்ஹுல் இஸ்லாமி , றாபிதத்துல் ஆலமுல் இஸ்லாமி , லஜ்னத்து உலமா அல் இமாம் அல் ஹரமைன், இத்திஹாத் அல் உலமா அல் முஸ்லிமீன், மர்கஸ் அல் அக்லாக் போன்ற மார்க்க அமைப்புக்கள் பிக்ஹுல் அல் இக்திலாப் தொடர்பான கலந்துரையாடல்களையும் வழிகாட்டல்களையும் வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றுடனான தொடர்புகளும் சட்டத்துறை சார்ந்த விடயங்களை தெளிவாகப் புரிந்து கொள்ளவும் முரண்பாடுகளை முகாமைத்துவப் படுத்தவும் உதவுவதாக அமையும்.

**(இ) இலங்கையில் கருத்து முரண்பாடுகளை் கையாளும் முறை**

இலங்கையின் சகல பகுதிகளிலும் செரிந்து வாழும் முஸ்லிம்கள் பன்மைத்துவ சமூக அமைப்பு சூழலில் இஸ்லாமிய சட்டங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது தொடர்பான அறிவைப் பெற்றிருப்பது அவசியமாகும். அத்துடன் அவற்றில் எதனை

முதன்மைபடுத்துவது பன்மைத்துவ சமூக அமைப்புகளின் மத்தியில் வாழும் முஸ்லிம் அதிகம் அழுத்தம் கொடுத்து நோக்க வேண்டியது எவை என்பன போன்ற விடயங்களிலும் அதிக கரிசனை காட்டுவது இன்றியமையாதவை. இந்த வகையில் கருத்து முரண்பாடுகளை சிறுபானமை இலங்கை முஸ்லிம்கள் எவ்வாறு கையாள வேண்டும் என்பது பற்றிய சில அறிவுறுத்தல்கள் இங்கே தரப்படுகின்றன. அவை வருமாறு.

1. **நடுநிலைப் போக்கைக் கையாளல்**: கருத்து முரண்பாடுகளின் அதி தீவிரப் போக்கைத் தவிர்ப்பதுடன் எதிலும் நடுநிலைப் போக்கை கடைப்பிடிப்பதையே இஸ்லாம் விரும்புகிறது.‘‘ தீவிரப் போக்கை கடைப்பிடித்தவர்கள் அழிந்து விட்டனர்‘‘ என நபி(ஸல்) அவர்கள் மூன்று தடவை கூறினார்கள்.[9]
2. **அதி முக்கியத்துவம் வாய்ந்த அமிசங்களுக்கு முதன்மையான இடமளித்தல்**: ஷரீஆவில் அவ்லவிய்யாத்தை பின்பற்ற வேண்டும் என்ற விடயம் தொடர்பாகப் பேசப்பட்டுள்ளது. இலங்கை முஸ்லிம்கள் கருத்து முரண்பாடுகளின் போது சில சொற்பமானவர்களைத் தவிர அத்கமானோர் இவற்றின் போது முதன்மைப்படுத்தல் எந்த விவகாரத்தை மறந்து விடுகின்றனர். இதனால் வாஜிபுகள் வீணடிக்கப்படுவதும் சாதாரணமானவை முதன்மைப் படுத்துவதும் அறியப்பட்டுள்ளது.
3. **முன்னைய அறிஞர்களின் கருத்து முரண்பாடுகள் இஜ்திஹாத் வழிமுறைகள் தொடர்பான பூரணமான தெளிவு காணப்படல் வேண்டும்**. இதன் மூலம் கருத்து முரண்பாடுகளின் போது உடன்பாடான விடயங்களுக்கு வரக் காரணமாக அமையும்.
4. **முஹ்கமான விடயங்களில் கவனம் செலுத்துதலும் முதஷாபிஹான விடயங்களில் கருத்துக் கூறுவதைத் தவித்தலும்:** தெளிவான முஹ்கமான விடயங்களை கவனித்தலும் அதே வேளை ஷரீஆ தீர்வு கூறாது மளனமாக இருந்த விடயங்களை தமது கவனத்தை செலுத்தாது மௌனமாக இருப்பதே மிகச் சிறந்த பண்பாகும்.
5. **குர்ஆன் சுன்னா மற்றும் ஏனைய மூலாதாரங்களில் கையாளப்பட்டுள்ள பதங்களை சரியாக புரிந்து கொள்ளல்**: கருத்து முரண்பாடுகள் தோன்ற பதங்களில் கையாளப்படும் பன்முக கருத்துப் பரம்பலும் மிக முக்கியமானதாக நோக்கப்படுகிறது.
6. **மாற்றுக் கருத்தை மதித்து நடத்தல்: கருத்து முரண்பாடுகளை தவிர்ப்பதும் மற்றவரின் கருத்துக்களை மதித்து நடப்பதும் ஸலபுகளின் சிறந்த வழிமுறையும்** இமாம்களிடையே கருத்தியல் சார்ந்த விடயங்களில் காணப்பட்ட ஆரோக்கியமான நிலையும் ஆகும்.
7. **உடன்பாடான விடயங்களில் அனைவரும் ஒன்றுபடுவதும் முரண்பாடான விடயங்களின் போது பரஸ்பரம் விட்டுக் கொடுப்புடன் நடந்து காள்வதும் முக்கியமானதாகும்:** இத்தகைய நடவடிக்கை இமாம்களிடையே காணப்பட்டது.

[9]. இமாம் முஸ்லிம், ஸஹீஹுல் முஸ்லிம் ஹதீஸ் 2670

8. **மனோ இச்சைக்கு வழிப்படுவதையும் சுயலாபம் தேடும் நடவடிக்கைகளையும் தவிர்த்துக் கொள்ளல்:** அல்லாஹ்வுக்கு பயந்து தனது சுயநலம் பிரபல்ய நோக்கத்தை தவிர்ந்து கொள்வது முக்கியமானதாகும்.
9. **இயக்கம் குழு என்ற தீவிர நிலையைத் தவிர்த்தல்**: கருத்து முரண்பாடுகள் தோன்ற மிக முக்கிய காரணங்களாக இருப்பதில் இவை பிரதானமானவை.
10. **.மற்றவர் பற்றிய நல்லவிப்பிராயம் இருத்தல் வேண்டும்:** அதிக முரண்பாடுகள்

**(ஈ) பிக்ஹுல் அவ்லவிய்யாவை நடைமுறைப்படுத்துவதில் எதிர்கொள்ளப்படும் சவால்கள்**

**7. சிபாரிசுகள்**

பிக்ஹுல் இக்திலாப் (கருத்து முரண்பாடுகள்) தொடர்பான கலந்துரையாடல்கள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் சிபாரிசுகள் முன்வைக்கப்படுகின்றன. அவையாவன

1. கருத்த முரண்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வு அனைத்து தரப்பினருக்கும் வழங்கப்பட வேண்டும்.குறிப்பாக மக்களை வழிநடாத்தக்கூடிய உலமாக்களுக்கு இவை தெடர்பான அறிவூட்டல் நிகழ்ச்சி நிரல் கொண்டு செல்லப்பட வேண்டும்.
2. கருத்து முரண்பாடுகளின் போது நடுநிலைப் போக்கை கடைப்பிடித்து ஒழுகுவதற்கான கருத்தியல் மற்றும் உளவியல் சார்ந்த மனோ நிலையை உருவாக்குதல்.
3. இஸ்லாமிய சட்டக்கலை சார்ந்த நிபுணத்துவம் வாய்ந்த அறிஞர்களை உருவாக்க வழி செய்தல் வேண்டும்
4. பிக்ஹுல் இக்திலாப் (கருத்து முரண்பாடுகள்) அதன் அணுகுமுறைகள் தொடர்பான ஆய்வுகள் இலங்கையை முன்மாதிரியாகக் கொண்டு அதிகம் மேற்க் கொள்ளப்பட வேண்டும்.
5. சர்வதேச இஸ்லாமிய அறிஞர்கள் இஸ்லாமிய பல்கலைகழகங்களுடனான தொடர்புகளையும் வளர்த்துக் கொள்வதன் ஊடாக கருத்த முரண்பாடுகள் தொடர்பான நீளமான வாசிப்பை ஏற்படுத்திக் கொள்ள வழி செய்ய வேண்டும்.
6. இயக்கம் குழு பிரபல்யம் போன்ற குறுகிய மனோ பாவங்களைக் களைந்து ஒரே கருத்தில் ஒன்றுபடும் தன்மையை வளர்த்துக் கொள்ளல்.
7. இலங்கை சிறுபான்மை முஸ்லிம்களுக்கான தனியான இஸ்லாமிய சட்ட ஒழுங்கு பிக்ஹுல் அகல்லிய்யா கருத்தியலை மையப்படுத்தி மேற்க் கொள்ள வேணடும்.
8. கருத்து முரண்படுகளை கண்காணித்து நடுநிலையாக நடந்து கொள்ளக்கூடிய பொதுவான சமூக அமைப்பு உருவாக்கப்படல் வேண்டும்.

**8. முடிவுரை**

சிறுபான்மையாக முஸ்லிம்கள் வாழும் நாடுகளில் பிக்ஹ் அல் இக்திலாப் பற்றிய தெளிவும் முஸ்லிம்களிடையே சரியான புரிதலையும் ஏற்படுத்துவது மிக முக்கியமான சமூகத்தேவை களில் ஒன்றாகவுமுள்ளது. இதன் மூலம் தேவையற்ற பிரச்சினைகள் தவிர்க்கப்பட்டு பன்மைத்துவ சமூக அமைப்பை பேணுவதற்கான வழி ஏற்பட வாய்ப்புண்டு. இலங்கை முஸ்லிம்களைப் பொருத்தவரையில் முதன்மைப்படுத்த வேண்டிய பல அமிசங்கள் காணப்படும் இச்சந்தர்ப்பத்தில் பிக்ஹுல் இக்திலாபில் அதி தீவரப் போக்குடன் நடந்து கொள்வத அவ்வளவ ஆரொக்கியமான செயற்பாடல்ல.

பன்மைத்துவ சமூக அமைப்பில் வாழும் இலங்கை முஸ்லிம்கள் கருத்து முரண்பாடுகளின் போது மிகச் சிறந்த நலினப் போக்கையும் விட்டுக் கொடுப்புடனும் நடந்து கொள்வதும் இன்றியமையாத தேவையாகவுள்ளது. அல்லாஹ் யாவற்றையும் நன்கறிந்தவன்.

**உசாத்துணை நூல்கள்**


யூஸுப் அல் கர்ளாவி,1995 அஸ்ஸஹ்வா அல் இஸ்லாமிய்யா பயனல் இக்திலாப் அல் மஷ்ரூயி வத்தபர்ருக்குல் மத்மூமி ஈ, முஅஸ்ஸ்ஸாஹ் அர்ரிஸாலாஹ்,

தாஹா ஸாபிர் அலவானி 1991 அதப் அல் இக்திலாப் (அறபு) இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம், அமெரிக்கா.

முஹம்மது அல்கஸ்ஸாலி 1997 , அல் ஹக் அல் முர்ரு முஅஸ்ஸஸா அர் ரிஸாலாஹ், எகிப்து.

ஜாமிய்யா நளீமிய்யா 2007 ,, இஸ்லரிய்ய சிந்தனை'' நளீமிய்யாப் பதிப்பகம் பேருவலை, இதழ் மார்ச் - ஜுலை 2007

முஹம்மது அல் வகீலி 1997 : பிக்ஹ் அல் அவ்லவிய்யா , வெளியீடு : இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம்,அமெரிக்கா, முதலாம் பதிப்பு

முஹம்மத் ஹுமாம் அப்துர் ரஹீம் 2001 : தஹ்லீலிய்யா த.்.ஸீல் பிக்ஹ் அவ் அவ்லவிய்யா

முஹம்மத் அல் கஸ்ஸாலி 1988 கதாயிபுல் ஹக் தாருஸ் ஷுரூக் எகிப்து.

பரகாத் அப்துல் பத்தாஹ் 1980 : அல் ஹரகத்துல் பிக்ரிய்யா ழித்தல் இஸ்லாம் வஅஹதாபிஹி , வெளியீடு தாருத் துராஸுல் அரபி எகிப்து

ரவுப் ஸெய்ன் : கோளாறு எங்கே 2002(மொழிபெயர்ப்பு) இ மீள் பார்வை வெளியீடு கொழும்பு இலங்கை

ஸெய்யித் அப்துர் ரவூப் அப்துல் காதிர் 1987 : அத்தகாபா அல் இஸ்லாமிய்யா பி தஹத்தியாத் தஹத்தியாத் அல் முஆஸராஹ் , தாருத் திபாஅ அல் முஹம்மதிய்யா

ஷெய்க் முஹம்மத் அல் கஸ்ஸாலி 1985 : மஅல்லாஹ் திராஸாத்துன் பித்த.்.வா வத்துஆத் , தாருல் குத்ப் அல் இஸ்லாமிய்யா

யூஸுப் அல் கர்ளாவி 2001: அவ்லவிய்யா அல் ஹரக்கா அல் இஸ்லாமிய்யா, மக்தபா வஹபா கெய்ரோ பதிப்பு :05